
வேதாத்திரியம்
பார்வையில்
பாரதியாரின்
பிரம்ம
ஞானம்...
அருள்நிதி மன்னார்குடி
பானுகுமார்.
• டிசைன் ~ தவம் ஆர்ட்ஸ் •

# வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்

அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்

இதனுள்ளே

- பிரம்மஞானம் தந்த பிரம்மஞானிகள். https://youtu.be/5q4R6_mZNQA
- அறிவொன்றே தெய்வம்? https://youtu.be/P9sVO6s_HEk
- .பரசிவ வெள்ளமும் காந்தமும். https://youtu.be/dEZBs1vWaRo
- மோனநிலையின் பெருமை https://youtu.be/e5PNfdRUQdQ
- பகைவனுக்கு அருள்வாய் https://youtu.be/eT4Usnoetj0
- கடமை செய்வோம் https://youtu.be/BXtUsb0fgio
- எண்ணமதை வலிமை பெறச்செய்வோம் https://youtu.be/-Dg2DGXH_3Y
- வறுமையை மண்மிசை மாய்ப்பேன் https://youtu.be/zHlcx9P9UYc
- நான் என்ற தத்துவமே நாமா யுள்ளோம் https://youtu.be/XU8jVXDs-i0
- செத்த பிறகு சிவலோகமா? வைகுந்தமா? https://youtu.be/9GpJpQreON4

## 1.பிரம்மஞானம் தந்த பிரம்மஞானிகள்

பாரதியின் கவிதைகளிலும் மகரிஷியின் வேதாத்திரியத்திலும் பல்வேறு சிந்தனைகளின் பரிணாமங்களின் உணர்வாய் திகழ்வது அவர்களது ஆன்மிக அறிவேயாகும்.

இவர்களது படைப்புகளில் வேதங்களின் பிழிவும் பக்தியின் பரவசமும் கலந்திருந்தாலும் அவற்றின் ஊடே ஒளிர்வது பிரம்ம ஞானமாகும்.

## பிரம்மஞானம்-ஒரு பார்வை

பிரபஞ்ச இயக்கங்களின் பிரமிக்கத்தக்க பேருண்மைகள் காலம் காலமாக வியப்பானதாகவே இருந்து வந்திருக்கின்றன.

உலகில் தோன்றிய ஞானியர்கள் அனைவரும் காலந்தோறும் பிரம்மம் குறித்து சிந்தித்து வந்துள்ளனர்.

விஞ்ஞானிகள் பிரம்மம் குறித்து ஆராய்ந்து வருகின்றனர். மெய்ஞ்ஞானிகள் உணர்ந்து வருகின்றனர்.

விஞ்ஞானி நியூட்டன், பிரபஞ்சமானது வெளி, காலம், பொருள், ஆற்றல் எனும் நான்கு பொருள்களானது என்றார்.

பின்வந்த ஐன்ஸ்டைன் வெளி- காலம், பொருள்-ஆற்றல், என்று இருகூறுகளாக்கி உரைத்தார்.

பிரம்மத்தை உணர்ந்த மெய்ஞ்ஞானிகளில் ஒருவரான ஆதிசங்கரரின் அத்வைதம், காசக்கிருத்சுநர் மொழிகளில் சிவன் பிரம்மத்தினின்று வேறுபட்டதன்று என்று வெளியிட ப்படுகின்றது.

சீவன் பிரமத்தினினின்றும் விடுபெறும் நிலை வரை வேறுபட்டது.

ஆயினும் முக்தி நிலையில் பிரம்மத்துடன் அது ஒன்றுபடுகின்றது. என்ற ஔடலோமியின் கருத்து ராமானுஜரின் விசிட்டாத்வைதமே.

எங்கும் நிறைந்த ஆன்மாவே நான் எனும் உபநிடத கருத்தை தன் ஆன்ம அனுபவத்தில் உணர்பவனே பிரம்மஞானி எனும் விவேகானந்தரின் சிந்தனையே,

"ஐயப் படாஅ தகத்த துணர்வானைத்
தெய்வத் தொ டொப்பக் கொளல்"

என்ற வள்ளுவரின் வாக்காக ஒலிக்கிறது.

பிரம்மத்தை உணர்ந்த பிரம்மஞானிகளின் உணர்விற்கேற்ப பிரம்மம் எல்லையற்றது.

சுத்த அறிவாய் விளங்குவது. பேராற்றல் மிக்கது. உயிர்களின் அகத்தும் புறத்தும் இருப்பது. எங்கும் நீக்கமற நிறைந்தது.

சீவன்களில் ஆன்மாகவாக இருப்பது. இயக்கமாகவும் இயக்கமற்றதாகவும் இருப்பது. ஒன்றாக இருப்பது. பலவாகத் தோன்றுவது என்று எல்லையற்ற பிரம்மத்தின் தன்மையை எல்லையில்லாது விவரித்துக் கொண்டே போகலாம்.

பிரம்மத்தையும், வாழும் வழியையும் சரியாக அறிந்து கொண்டவன் பிரம்மஞானி.

## பாரதி தந்த பிரம்மஞானம்.

மெய்ஞ்ஞானிகள் விளக்கம் தரும் பிரம்மத்தின் தன்மையும் உணர்வும் பாரதியிடம் ஆன்ம ஒளியாக சுடர்வதை அவரது பாடல்களில் பார்க்கலாம்.

பாரதியின் பிரம்மஞான உணர்வை, 1. சிவவே பிரம்மம் 2. காளியே பிரம்மம் 3. சக்தி பிரம்மம் 4. கண்ணனே பிரம்மம் 5. ஆன்ம-ஆன்ம உணர்வே பிரம்மம் 6. பிரம்மஞான உணர்வு நிலை 7. ஆன்ம விழிப்பணர்வு என பகுத்துக் காணலாம்.

### வேதாத்திரி மகரிசி தந்த பிரம்மஞானம்.

இந்திய தத்துவஞானியான வேதாத்திரியார் பிரம்ம ஞானத்தின் வழியே பிரபஞ்ச இயக்கத்தைப் பற்றி எளிமையாகப் பாமரனும் புரிந்து கொள்ளும் வகையில் தந்திருக்கிறார்.

இறைநிலையே தன்னிடம் வந்து ”பிரம்ம ஞானத்தை எழுதுக” என்று கூறியதாகவும் கூறியுள்ளார்.

### மறைபொருட்களை உணரும் நிலை

பிரம்ம ஞானத்தை இரகசியமாக வைத்துக் கொண்டும், ஒரு சிலருக்கே (அவர்கள் பார்வையில் தகுதியுடையவர்களுக்கு மட்டும்) அதைக் கற்பிக்க வேண்டும் என்ற கொள்கை இன்று தகர்ந்துள்ளது

பிரம்மஞானம் உலகில் மக்கள் அனைவருக்கும் பரவாமல் தடைப்பட்டதற்கு ஒரு முக்கியக் காரணம் உண்டு..

அதை உணர்ந்து கொண்டு, தக்க முறையில் அந்தத் தடைகளைக் களைய வேண்டும். தடைக்குக் காரணங்களாவன:

அனைத்தியக்க அருட்பேராற்றலான இறைநிலை – பிரம்மம், அதிலிருந்து தோன்றிய விண், விண் சுழலிலிருந்து தோன்றிய காந்தம், காந்தத் தன்மாற்றங்களாகிய அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம் – இவற்றின் கடைசி அலை இயக்கமாகிய மனம்.

இவையனைத்தும் மறை பொருட்கள். இவை இல்லையென்று மறுத்துக் கூற முடியாது. இவ்வாறு உள்ளன என்று புலனறிவுக்கு எடுத்துக் காட்டவும் முடியாது.

ஆயினும், இவற்றை அறிவதற்காகவே ஆறாவது அறிவு எனும் சிந்தனையாற்றல் மனிதனிடம் அமைந்திருக்கிறது. ஐந்து புலன்கள் மூலம் தோற்றப் பொருட்களை உணர்வது ஐயறிவு.

புலன்கள் மூலம் உணரப் பெறும் பொருட்களுக்கு மூலமான மனம், காந்தம், விண், மெய்ப்பொருள் இவற்றை உணரக்கூடிய அறிவு தான் ஆறாவது அறிவு.

புலன்களால் பொருட்களை உணரும்போது மன அலைச்சுழல் மிகவும் விரைவாக இயங்குகிறது. அந்த விரைவு நிலையில் மறைபொருட்கள் விளங்கா.

மன அலைச்சுழல் விரைவை அகத்தவச் சாதனையால் குறைத்து, அந்த நுண்ணிய நிலையில் தான் மறைபொருட்களை உணர முடியும்.

மனிதனாக வாழும் எல்லோருமே முடிவாக நோக்கிச் செல்லும் கடைநிலைக் குறிப்பு பிரம்ம ஞானமேயாகும். வாழ்க வளமுடன்.

## 2 அறிவொன்றே தெய்வம்?

"மனதின் அலையை குண்டலினியோகத்தின் மூலம்

குறைத்து, அதைக் கொஞ்சம் கொஞ்சமாக நிலைக்குக் கொண்டு வந்து, இவனே அதுவானால் தான் அந்த நிலையில்தான் அறிவே தெய்வம் ஆகும்".

."அறிவேதான் தெய்வமென்றார் தாயுமானார்,
  அகத்ததுதான் மெய்ப்பொருள் என்றெடுத்துக்காட்டி
அறிவதனை அறிவித்தார் திருவள்ளுவர்;
  அவ்வறிவை அறிவதற்கு முறைகள் சொன்னார்
அறிஞர் திருமூலர், அவ்வறிவில் ஆழ்ந்து
  ஆனந்தக் கவியாத்தார் இராமலிங்கர்,
அறிவில் அறிவாய் நிலைத்து அறம்வகுத்தோர்
  அதை வாழ்ந்து காட்டினோர் நினைவு கூர்வோம்". (ஞாக.பா.7)

அறிவேதான் தெய்வம் என்பதை பாரதியார் மிகத் தெளிவாகவும் விரிவாகவும் தம் பாடலில் பதிவு செய்துள்ளார்.

ஆயிரந் தெய்வங்கள் உண்டென்று தேடி
அலையும் அறிவிலிகாள்!-பல்
லாயிரம் வேதம் அறிவொன்றே தெய்வமுண்
டாமெனல் கேளீரோ?

மாடனைக் காடனை வேடனைப் போற்றி
மயங்கும் மதியிலிகாள்!-எத
னூடும்நின் றோங்கும் அறிவொன்றே தெய்வமென்
றோதி யறியீரோ?” (பாரதியார்)

## அறிவுத் தத்துவம் வேதாத்திரியம்

வேதாத்திரியத்தின் தத்துவச் சிந் தகைள் அனைத்திலும் அறிவுத் தத்துவம் அடிப்படையாகக் இருப்பதைக் காணலாம்

மனிதனுக்கு ஆறாவது அறிவு உண்டு என்பதும், இறைவெளியையும், அதன் உள்ளாற்றலான அறிவையும். அறிவின் புற இயக்கமான மனத் தையும் அறியத்தக்க அறிவுதான் ஆறாவது அறிவு என்பது வேதாத்திரியாரின் கருத்தாகும்

அறிவு என்பது ஒரு இயக்க ஒழுங்கு என்றும், எங்கும் நிறைந்திருக்கின்ற ஒரு மகோன்னதமான சக்தி, வேகத்தை ஒழுங்குபடுத்தி முறையாக இயங்கச் செய்யும் ஓர் அற்பதமான ஆற்றல்தான் அறிவு என்றும் மகரிஷி குறிப்பிடுகின்றார்.

மகரிஷியின் அறிவுத் தத்துவத்தின் குறியீடாக பறைசாற்றிக் கொண்டிருப்பதே பொள்ளாச்சி அழியாறு பகுதியில் ”ஓம்” என்னும் வடிவில் அவரால் வடிவமைக்கப் பட்டிருக்கும அறிவுத் திருக்கோயில் ஆகும்.

பாமர மக்களின் தத்துவஞானி வேதாத்திரி மகரிஷியின் தத்துவச் சிந்தனைகள் தனித்துவமான சிற் பபுக்கள் உடையதாக விளங்குகிறது.

மகரிஷியின் சில சிந்தனைகள் இந்திய தத்துவ ஞானத்திற்குப் புதிய வரவாகவும், புத்தொளி ஊட்டுபனவாகவும் விளங்குகின்றன.

இன்பநிலை எய்த வாரீர்! – வேதாத்திரியம்

”அறிவினது நிறைநிலையை ஆதியாக
  அமைதி நிலையில் உயர்ந்து, அதுவாம்போது
அறிவு உயர்ந்தகன்று, அமைதிப் பேரின்பத்தில்
  அணுமுதலாய் அண்டகோடி தானேயாக,
அறிவே அவ்வந் நிலையில் ஒழுங்கியக்க
  அமைப்பாகி, முறை பிறழாது இயங்கும் மேலாம்
அறிவின் பெருமை உணர்ந்த இன்ப வெள்ளத்து
  ஆனந்தத்தில் திளைக்க வாரீர் வாரீர்.” ஞாக.பா.1236)

உடலோ பல அணுக்களால் கட்டப்பட்ட ஒரு தோற்றம். அணுவோ எல்லாம் வல்ல அருட்பேராற்றலின் நுண்ணிய சுழலலை. அணுவினால் கட்டப்பட்ட தோற்றம்.

இந்த உடல். உடலுக்குள் அந்த நுண்ணிய பொருளாக உள்ள அணுவோ உயிர். அணுதிரட்சியில் உடலாகவும் இருக்கிறது.

உயிருக்கு மத்தியில் தொடங்கி பேரியக்க மண்டலம் முழுவதும் விரிந்து எல்லையற்ற விரிவு உடைய ஒரு அரூபநிலையே அறிவு.

நீ உன் உடலை நினைத்துப் பார். நீ புலன்கள் வரையில் உன்னை எல்லை கட்டிக் கொண்டு உடலே நான் என்று எண்ணுகிறாய்.

உடலில் உள்ள உயிரை நினைத்து பார். உலகிலுள்ள எல்லா உயிர்களோடும் பேரியக்க மண்டலத்தில் ஆற்றல் களமாக நிறைந்துள்ள பரமாணு மண்டலத்தோடு ஒன்றுபட்டிருக்கிறாய்.

இந்த நினைவில் நீ ஆன்மாவாய் பேரியக்க மண்டலம் முழுவதும் பரவியுள்ள சக்தியாக உணர்கிறாய்.

அதற்கும் மேலாக நுணுகி நின்று உன் அறிவை நோக் கு. உயிராற்றலின் மையத்தில் தொடங்கி, உடலிலே பரவி பேரியக்க மண்டலம் முழுவதும் பரவி அதற்கு அப்பாலும் உள்ள பிரம்ம நிலையாய், சுத்தவெளியாய் உள்ளதை உணர்வாய்.

உனது அறிவின் உண்மை நிலையை உணர்ந்த பின் உனது அறிவின் விரிவே அன்பாக மலர்ந்து உயிர்கட்கு உதவி செய்து, உயிர்த் துன்பம் போக்கவும், எந்த உயிருக்கும் துன்பம் தராமல் செயலை ஒழுங்குபடுத்திக் கொள்ளவேண்டும், என்ற விழிப்பு நிலையும் வந்துவிடும்.

இந்த அறிவு நிலையிலேயே உன்னை உடலாகவும், உயிராகவும், அறிவாகவும் உணர்வாய். உனது அறிவு எல்லையற்றது, விரிந்து அரூபமாக உணரும் நிலையில் அறிவேதான் பிரம்மம் என்ற உண்மையை உணர்வாய்.

இந்த உள்ளொளியில் தன் முனைப்பு என்ற இருள் மறைந்துவிடும்.

ஒரு தலைப்பட்சம், வெறுப்புணர்ச்சி, பொறாமை, கடும்சொல் நீக்கி நீ உன்னை உத்தமப் பொருளான இறைவனாகவே காண்பாய். உன் அறிவை அறிந்த பேரறிவால் எந்த ஒன்றையும் குறிப்பால் உணர்ந்து தக்கபடி கடமையாற்ற முடியும்.

உன்னுடைய நிலையை உனக்கு உட்பொருளாக உள்ள ஆன்மாவை உணர்ந்து கொண்டால் உடல், உயிர், மனம் என்ற மூன்றையும் அறிந்து கொள்ளும் அறிவு உண்டாகும்.

அந்த அறிவைக் கொண்டு எவருள்ளத்தும் எழும் எண்ணங்களையும் செயல்களையும் உணர்ந்து தக்கபடி வெற்றியோடு உன் கடமையாற்றலாம்.

அகம் என்பது ஆன்மாவைக் குறிப்பதாகும். அது மனிதனுடைய கருமையத்தில் இறைநிலையையும் அதன் அளவற்ற ஆற்றலையும் சுருக்கி வைத்திருக்கும் தெய்வீக நிலையம்.

ஆன்மாவை உணர்ந்தவர் ஆன்மாவில் இயங்கும் அறிவை தெய்வமாக உணர்வார்.

ஆகையால் ஆன்மாவை அதன் இருப்பு, இயக்கம், விளைவு இவைகளை சிறிது கூட சந்தேகமின்றி உணர்ந்து கொள்ள வல்லவர் இறைவனாகவே மதிக்கப்படத்தக்கவர். வாழ்க வளமுடன்

# 3.பரசிவ வெள்ளமும் காந்தமும்.

எல்லையற்றது நீங்கும் நீக்கமற நிறைந்துள்ள வெளியின் தன்மாற்ற வெளிப்பாடே இப்பிரபஞ்சம்.

நாம் வாழுகின்ற இப்பிரபஞ்சம் மட்டுமன்றி அதற்கப்பாலும் எலலையற்று விரிந்த பேரறிவாகவும் பேராற்றலாகவும் எங்கும் நிறைந்த அரூபமாக இறையாற்றல் நிறைந்திருக்கிறது.

வெளிக்கு உருவமில்லை. ஆனால் வெளியில் எத்தனை உருவங்கள். மண், மரம், மனிதன் என்பன அரூபத்தின் உருவ வெளிப்பாடுகளே.
உருவமில்லாத ஒன்று எத்தனை உருவங்களாக வருகிறது என்று உணர்ந்த நிலையில்,

"உருவன்றியே நின்று உருவம் புணைக்கும்
கருவன்றியே நின்றுதான் கருவாகும்"

என்றார் திருமூலர். அனைத்துப் பொருள்களிலும் உள்ளும் புறமுமாக நிறைந்திருப்பது இறைநிலையாகும்.

"உள்ளும் புறமுமாய் உள்ளதெல்லாம் தானாகும்
வெள்ளம் ஒன்றுண்டாம் அதனை
தெய்வம் என்பார் வேதியரே"

என்ற பாரதியாரின் மொழியிலுள்ள வெள்ளம் என்பது பெருவெளியான தெய்வமேயாகும்.

வெளி ஒன்றுதான். அதற்கு நாம் வைத்த பெயர்கள்தான் பல. வெளிக்கு ஒரு பெயர் பிரம்மம். இன்னொரு பெயர் பிதா. மற்றொரு பெயர் அல்லாஉற். இன்னும் எத்தனை எத்தனை யே பெயர்கள்!

வெள்ளம் என்பதற்கு வேதாத்திரி மகரிஷி சரியான விளக்கத்தைத் தருகிறார்கள்.

வெள்+அம் = வெள்ளம். "வெள்" என்றால் தூய்மையானது. "அம்" என்றால் இறைநிலையும் அதன் அலையுமாகிய காந்தம்.

"அம்" என்ற இறைநிலை மிக நுண்ணிய காந்த அலையாக இருப்பதனால் எல்லாவற்றிலும் ஊடுருவி பாய்ந்து நிரம்பும் தன்மையாக இருக்கிறது.

பாய்மப் பொருளாக இல்லை என்றால் எல்லாப் பொருட்களையும் காத்து வரும் தன்மையில்லாத ஒன்றாகிவிடும்.

இறைநிலை பாய்மப் பொருளாக இருந்து அனைத்திலும் ஊடுருவி பாய்ந்த நிரம்பும் தன்மை கொண்டதாகையால் அது இல்லாத பொருளோ, துகளோ இல்லை.

அதனால் தான் தூணிலும் இருக்கிறான். துரும்பிலும் இருக்கிறான் என்ற பழமொழி வழக்கை உறுதி செய்வதற்குக் காரணமாகிறது.

புலன்களால் உணர முடியாத, அனைத்தடக்கமான, இக்காந்த ஆற்றலே தெள்ளத் தெளிவான பாய்மப்பொருள் என்று வேதாத்திரியம் கூறுகிறது.

வெள்ளம் என்ற பாய்மப் பொருளையே முன்னோர்கள் பிரணவம் என்ற வார்த்தையினால் வழங்கி வந்தார்கள்.

இறைநிலை எல்லாவற்றிலும் புகுந்த நிறையும் பாய்மப் பொருள். (Mighty Transparent fluid)

பாய்மப்பொருள் நீருமன்று. தீயுமன்று. வாயுமன்று. இவை அனைத்தும் அல்லாத ஒரு பொருள்.

அது பயிறுக்குள் நீரும் நீருக்குள் பயறும் போன்றது. எல்லா இடங்களிலும் ஊடுருவிப் பாயத்தக்க, எல்லாவற்றையும் ஊடுருவிப் பார்க்கத்தக்க தங்கு தடையில்லாத பொருள்.

அது எதுவாக இருக்க முடியும்.? இறைநிலை ஒன்றுதான் எல்லா இடங்களிலும் ஊடுருவிப் பாயத்தக்கது. அலையாக இருந்தாலும் சில இடங்களில் ஊடுருவிப் பாயும். சில இடங்களில் தங்கிவிடும்.

இது எப்படி என்றால்.....காற்றடிக்கிறது. தடை இருந்தால் காற்று ஊடுருவிப் பாய முடியாது. தடைபடுகின்ற இடத்தில் அது சுற்றி வளைத்துப் போகும்.

ஆனால் சுத்தவெளியோ தனக்கு எதுவுமே தடையாக இல்லாமல் எங்கும் ஊருவிப் போகக் கூடியது. எங்கும் நிறைந்த ஒரு பொருள் அது.

இதைத்தான் தாயுமானவர் "அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் நீக்கமற நிறைந்த பொருள்" என்று சுத்தவெளியை வர்ணிப்பார்.

ஆதலால்தான் தெய்வத்தின் எங்கும் நிறைந்த தன்மையை வெள்ளம் என்று குறிப்பிட்டார் பாரதியார்.

மேலும் எந்தப் பொருளையும் ஊடுரூவிச் செல்ல அனுமதிக்கும் சுத்தவெளி.

பயிறுக்குள் நீரும், பயறைச் சுற்றி நீரும் இருப்பதுபோல் உள்ளும் புறமுகமாய் இருப்பது சுத்தவெளியே. இதைத் தெளிவாக விளக்குகிறார் பாரதியார்.

இந்த சுத்தவெளி எத்தகையது என்பதை உணர்ந்தவர்கள் அறிந்தவர்கள் அதை வார்த்தைகளால் விளக்க முடியாமல் தவித்தனர்.

அதற்கேற்றவாறு நல்ல வார்த்தைகளும் தமிழ் மொழியில் அதிகம் அப்போது உருவாகவில்லை.

அதனால்தான் உலகம் அதனை தெரிந்து கொள்ளாமல் இதுவரையில் தளர்ச்சி நடையில் இருந்திருக்கிறது.

சுத்தவெளிக்கு Highly Transparent Mighty Divine Fluid என்று அதற்கொரு பெயர் வைத்தார் வேதாத்திரியார்.

பாரதியார் தனது கவிதைகளில் இரண்டு இடங்களில் வெள்ளம் என்று குறிப்பிடுகின்றார்.

உள்ளும் புறமுமாய் உள்ளதெலாந் தானாகும்.
வெள்ளமொன்றுண் டாமதனைத் தெய்வமென்பார் வேதியரே

காணுவன நெஞ்சில் கருதுவன உட்கருத்தைப்
பேணுவன யாவும் பிறப்பதந்த வெள்ளத்தே

எல்லை பிரிவற்றதுவாய் யாதெனும் ஓர் பற்றிலதாய்
இல்லை உளதென்று அறிஞர் என்றும் மயல் எய்துவதாய்.

வெட்டவெளி யாய் அறிவாய் வேறு பல சக்திகளைக்
கொட்டு முகிலாய் அணுக்கள் கூட்டிப் பிரிப்பதுவாய். -----------

நித்தசிவ வெள்ளம் என்னுள் வீழ்ந்து நிரம்புது என்றுள்
சித்தமிசைக் கொள்ளுஞ் சிரத்தை ஒன்றே போதுமடா!"
(பாரதியாரின் பரசிவ வெள்ளம்.)

என்று பரசிவ வெள்ளம் என்ற தலைப்பில் பாரதியார் பாடியுள்ளார்.

பாரதியாரின் பரசிவவெள்ளம் என்ற கவியை தன்னுடைய கையெழுத்தில் எழுதிப் பார்த்து, படித்து இரசிப்பது மட்டுமின்றி அந்தப் பாடலைப் பற்றி தனது அருளுரையில் வேதாத்திரியார் அடிக்கடி குறிப்பிடுவதுண்டு.

**பாரதியாரின் தத்துவத்திற்கு மகரிசியின் விளக்கம்.**

பிரபஞ்சம் முழுவதும் இயங்கிக் கொண்டிருப்பனவற்றின் பொருள் நிலை எது? நிகழச்சி நிலை எது?

ஆப்பிள் பழம் என்பது பொருளா நிகழ்ச்சியா? ஐம்புலன்களால் காணப்படும் உணரக்கூடிய அனைத்தையும் பொருட்கள் என்றுதான் சொல்வோம். அது மொழி வழக்கு.

தோற்றப் பொருட்கள் அனைத்தும் பொருள் எனக் கொள்வது சாதாரண மனப்போக்கு. ஆனால் உண்மையில் அவை பொருளா என சிந்திக்க வேண்டும். ஆராய வேண்டும்.

"உருவம் மலர்தான். உட்பொருள்

உணர விண்ணெனும் நுண்ணணுவே!
அருவம் ஆதி அசைந்த நிலை,
அணுமுதல்அகண்ட பேரண்டம்!" (ஞாக.பா.1649)

புலனறிவைத் தாண்டி விண்ணறிவுக்குப் போக வேண்டும். பழத்தை நெருப்பில் போட்டால் எரிந்து சாம்பலாகிவிடும்.

பழம் என்ற காட்சி மறைந்துவிட்டது. அப்படியானால் பழம் என்பது அணுக்கள் இணைந்த ஒரு காட்சி-நாடகம். பழத்தில் நின்ற அணுக்கள் அழிந்துவிட்டதா என்றால் இல்லை.

அணுக்கள் என்பது நுண்ணியக்க மூலக்கூறான இறைத்துகளின் தொகுப்பு. இறைத்துகளோ இறைநிலையின் பின்னம் ஆகும்.

அசைந்து கொண்டிருக்கும் பொருட்கள் அனைத்தும் தன்னுடைய நிலையில் மாறிக் கொண்டே இருக்கின்றன. அதனை நிகழ்ச்சி என்கிறோம்

சித்தர்கள் வரிசையில் பத்தொன்பதாவது மற்றும் இருபதாவது சித்தர்களாக காட்சி தருகிறார்கள் என்றால் அது மிகையில்லை.

நம்மோடு வாழ்ந்து உரையாடி ஞானவிளக்கம் தந்த தற்கால சித்தர்கள் பாரதியும் வேதாத்திரியும் ஆவார்கள். வாழ்க வளமுடன்.

# 4.மோனநிலையின் பெருமை

ஊரில் ஒரு பெரிய பணக்காரன் இருந்தான் அவனுக்கு எல்லாம் இருந்தாலும் மனதில் நிம்மதி இல்லாமல் ஒரே குழப்பதிலே இருந்தான்

ஒரு ஜென் குருவை சந்தித்து ஐயா எனக்கு ஜென் கற்க ஆசை சொல்லிக்கொடுங்கள் என்றான்.

இவனின் அவசரமான பேச்சை கவனித்த குரு, இதோ பாரப்பா உன் மனம் ஒரு நிலையாக இல்லை, நான் என்னதான் கற்றுக் கொடுத்தாலும் உனக்கு புரியாது நீ போயிட்டு அப்பறம் வா என்கிறார்.

இருந்தாலும் இவன் விடவில்லை

ஐயா என்னால் போகமுடியாது தயவுசெய்து எனக்கு நீங்க ஜென் சொல்லித்தரேனும் மற்றும் எனக்கு நிறைய குழப்பங்களும் சந்தேகமும் இருக்கு அதெல்லாம் நீங்கதான் தீர்த்து வைக்கணும் என்கிறான் .

அப்படியென்றால் சரி நான் உன்னை எனது சீடனாக ஏற்றுக்கொள்கிறேன் ஆனால் ஒரு நிபந்தனை இங்கே நீ ஒரு ஆறுமாதம் மௌனவிரதம் கடைபிடிக்கவேண்டும் சரியா?

ஆறு மாதம்மா சற்று யோசித்து சரிங்க ஐயா இருக்கிறேன் என்று சம்மதம் தெரிவித்தான்

ஆனால் ஆறு மாதம் கழித்து எனது சந்தேங்களை நீங்க போக்கணும் சரியா?

சரி சரி அதெல்லாம் உன் மனதில் வச்சிக்கோ நான் ஆறு மாதம் கழித்து உனது அனைத்து குழப்பங்களையும் நீக்குகிறேன் என்றார் குரு.

அதன்பின் அந்த பணக்காரன் ஆசிரமத்தில் சேர்ந்து மௌன விரதத்தை கடைபிடிக்கிறார்.

அடுத்தடுத்து அவருடைய நேரங்கள் முழுவதும் தியானம், மந்திரம் ஜெபிப்பது, ஆன்மீக சொற்பொழிவை கேட்பது இப்படியே நாட்கள் ஓடியது

மெல்ல மெல்ல அவருடைய மனம் தெளிந்த து , முன்பு குழம்பிருந்த விஷயங்கள் எல்லாமே தெளிவாக புரிய ஆரம்பித்தது.

ஆறுமாதம் கழித்து குரு அவரை அழைத்தார், நீ மௌன விரதம் இருந்தது போதும் இப்போது உனது சந்தேகங்களை கேள் என்றார்.

உடனே அந்த பணக்காரன் அமைதியான குரலில் கேட்பதற்கு ஒன்றும் இல்லை குருவே எல்லா குழப்பங்களும் எனக்கு நீங்கியது இப்போது நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன் என்று.

இந்த கதை நமக்கு உணர்த்துவது என்னவென்றால் ” சும்மா கேள்வி கேட்டால் மட்டுமே நமக்கு பிரச்சனைகள் நீங்காது மற்றும் ஆன்மீகத்தில் வளர்ச்சி அடையமுடியாது சொல்லும் விசயங்களை கேட்டு சில மாதங்களோ அல்லது வருடங்களோ மௌனபயிற்சி செய்யவேண்டும் .

**மனம் குழப்பம் என்றால் அப்படியேதான் இருக்கும் , சிலநேரங்கள் மௌனமாக மனதை கவனியுங்கள்**

அப்போதுதான் மனம் தெளிவடையும் மனம் தெளிந்தால் தானாக எல்லாமே புரியவரும்

”பாரதியாரும் நினைக்கும் பொழுதும் மௌனநிலை வரவேண்டும்”

என்று கணபதியிடம் வேண்டுகிறார்.
”

எனக்கு வேண்டும் வரங்களை
இசைபேன் கேளாய் கணபதி!
மனத்திற் சலன மில்லாமல்,
மதியில் இருளே தோன்றாமல்,
நினைக்கும் பொழுது நின்மவுன
நிலைவந் திடநீ செயல்வேண்டும்.
கனகுஞ் செல்வம்,நூறுவயது:
இவையும் தரநீ கடவாயே.” (பாரதியார் வி.நா.மா)

## மௌனம் - வேதாத்திரியம்

நாம் கருத்தொடராய்ப் பெற்ற வினைப் பதிவுகளையும், பிறவி எடுத்த பின் ஆற்றிப் பெற்ற வினைப் பதிவுகளையும் தன்மைகளாகப் பெற்றவர்களாவோம்.

நம் வினைப்பதிவுகள் அனைத்தும் புதையல் போல உயிர் எனும் இயற்கை கம்ப்யூட்டரில் அடங்கியுள்ளன.

காலத்தால் மலரும் அப்பதிவுகளின் வெளிப்பாடுகளே எண்ணங்கள், செயலார்வம், நோய்கள், இன்ப துன்பங்கள் யாவுமாகும்.
.
ஒரு தொழிலதிபர் அல்லது வணிகர் மாதந்தோறும் அல்லது ஆண்டுதோறும் இருப்பிலுள்ள பொருள்களை கணக்கெடுப்பது போல எல்லாருமே மாதத்திற்கு ஒரு நாளோ அல்லது ஆண்டுக்குச் சில நாட்களோ ஒதுக்கிக் கொண்டு நம் இருப்பைக் கணக்கெடுக்க மௌன நோன்பு அவசியம்.
.
இந்தக் கருத்தோடு, தவத்தால் அறிவை அமைதிக்கும் கூர்மைக்கும் கொண்டு வந்து, அகத்தாய்வால் நமது இருப்புகளைக் கணக்கெடுத்து, புதிய திட்டங்கள், ஆக்க வாழ்வுக்கு வழி செய்து கொள்ள வேண்டும்.

மௌன நோன்பின் உண்மை நோக்கமறிந்து விழிப்புடன் காலத்தைப் பயன்படுத்தி, ஆன்ம தூய்மையும், வாழ்வின் வளமும் பெறுவோம்.

தான், குடும்பம், உற்றார், ஊர், உலகம் என்ற ஐந்து பிரிவுகளையும் பல தடவை வாழ்த்தி அமைதி காண்போம்.
.

"மோனநிலையின் பெருமை யார் எவர்க்கு
  முன்படர்ந்து வாயாலே சொல்லக்கூடும்?
மோனமே அறிவினது அடித்தளம் ஆம்,
  மிகவிரிவு. எல்லையில்லை, காலமில்லை;
மோனத்தில் அறிவு தோய்ந்து பிறந்தால்
  முன்வினையும் பின்வினையும் நீக்கக் கற்கும்
மோனநிலை மறவாது கடமையாற்ற
  மென்மை, இன்பம், நிறைவு, வெற்றி அமைதியுண்டாம்"(ஞாக.பா.1640)

மௌன காலம்

"பேசா நோன் பாற்றுங்கால் அறிவு தன்னைப்
  பழக்கங்கள் எவ்வாறு வலுவாய் மோதி
பேசா நோன்பைக் களைத்துப் பேசவைக்கப்
  பெரும் போரை நடத்துகின்றதென உணர்வோம்;
பேசா நோன்பு இயற்கைக்கும் உயிர்க்கும் உள்ள
  பிணைப்பை நன்குணர்ந்திட ஓர் நல்வாய்ப்பாகும்;
பேசா நோன் பென்பது வாய் மூடல் அல்ல,
  பெரியமறை பொருள் மனதை அறியும் ஆய்வே." (ஞாக.பா.1638)

மௌனத்தில் பழகிப் பழகித் தான் எண்ணங்களை வெற்றி கொள்ள வேண்டும். மௌனத்தில் கிடைக்கக் கூடிய நல்ல எண்ணங்கள், முன் செய்த நல்ல செயல்களின் பதிவுகள் எல்லாவற்றையும் குறிப்பெடுத்துக் கொண்டு அவற்றைச் செயல்படுத்தி விட்டோமானால், வாழ்க்கையில் மேம்பாடு வரும்....

இவைகளை எல்லாம் அனுபவத்தில் நீங்கள் பார்க்கலாம்.

நாம் பேசிக் கொண்டிருக்கும் போது, உணர்ச்சிவயப்பட்ட நிலையில் இருக்கிறோம். நமக்கு யார் யாருடைய கருத்துக்கள் வான் காந்தத்திலிருந்து வரும் என்றால், உணர்ச்சிவயப்பட்ட நிலையில் உள்ளவர்களின் கருத்து தான் வரும். அவை நமது மூளையோடு சார்ந்து நமது எண்ணங்களாக வரும்.

ஆனால், மௌனத்தில் பேரமைதி நிலைக்கு வந்தால், அமைதியாக இருந்து ஆரய்ச்சி செய்து, இறைநிலையை உணர்ந்து, அதோடு தொடர்பு கொண்டால், அந்த நிலையை உணர்ந்த பெரும் மகான்கள், அவர்களுடைய ஆற்றல்கள், எண்ணங்கள் எல்லாம் நம்முடைய எண்ணங்களாக வரும். அதை எல்லாம் அனுபவித்துப் பார்க்கலாம். அனுபவித்துப் பார்ப்பதற்கு ஏற்ற காலம் தான் 'மௌன காலம்'.

எவ்வளவு காலம் மவுனம் மேற்கொள்ளலாம்?

நீங்கள் ஒரு நாள் மௌனம் இருக்கலாம். இரண்டு நாளும் இருக்கலாம்.

ஆனால், அந்த மவுன காலத்தில் கிடைத்த பயன்களை நினைவில் பதிய வைத்துக் கொள்ளுங்கள். வாழ்க்கையில் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளவும் வேண்டும்.

போகப் போக ஒரு மணி நேரம் மவுனம் இருந்தால் கூடப் போதும். ஆனாலும் அந்த ஒரு மணி நேரமும் வெற்றி அளிப்பதாக இருக்கும். இங்கேயும் அங்கேயும் மனதை ஓடவிடாது இருக்க முடியும்.

அப்படி இருந்து பழகி விட்டோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். எந்தச் செயல் செய்தாலும் பதிவாகி அந்தந்தப் பதிவுகள் அவ்வப்போது எண்ணங்களாக வருகின்றன அல்லவா?

அதேபோல மௌன காலத்தில் நீங்கள் இறைநிலையில் இருந்து ஏற்படுத்திக் கொண்ட மவுனப் பதிவும் சாதாரண காலங்களில் கூட மேலே வந்து அவ்வப்போது அமைதி நிலைக்கு உங்கள் மனதை அழைத்துச் செல்லும்.

## 5 பகைவனுக்கு அருள்வாய்

தமக்குத் தீங்கு செய்தாரைத் தண்டிக்கும் முறையாவது தீமை செய்தவர் வெட்கப்படும் அளவுக்கு நன்மையைச் செய்வதுடன் அவர் செய்த தீமையயும் தாம் செய்த நன்மையையும் மறந்து விடுதலாகும்.

பிறர் செய்த தீமையை நினைப்பதால் பகைமை உணர்வும், தாம் செய்த நன்மையை நினைப்பதால் தன் முனைப்பும் துளிர்க்கும். அதனால் மறந்து விடுக என்றார்.

உளவியல் அடிப்படையில் ஒருவரைத் திருத்த, உடன்பாட்டு முறையிலே அணுகுதல் வேண்டும்.

பழிவாங்கும் உணர்வில் நின்ற ஒருவனை "ஒறுத்தல்" "நாண" என்ற சொற்களின்வழி, பழி வங்குதலுக்கு உடன்பட்டு நிற்பார் போலக் காட்டி அவன் வெகுளியைத் தணிய வைத்துப் பின் நன்னயம் செய்யும் நெறியில் ஆற்றுப்படுத்தும் நிலையில் இக்குறள் அமைந்திருப்பதைக் காணலாம்..

**இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்**
**நாண நன்னயம் செய்துவிடல்**

பகைவனுக்கும் அருள்வாய் என்கிறார் பாரதி. பகை நடுவினில் பரமன் வாழ்கின்றான் என்கிறார் பாரதி.

"பகைவனுக் கருள்வாய்-நன்னெஞ்சே!
பகைவனுக் கருள்வாய்!
புகை நடுவினில் தீயிருப்பதைப்
பூமியிற் கண்டோ மே-நன்னெஞ்சே!
பூமியிற் கண்டோ மே.
பகை நடுவினில் அன்புரு வானநம்
பரமன் வாழ்கின்றான் -நன்னெஞ்சே!" (பாரதியார்)

வேதாத்திரியத்தில் பகைவர்களையும் வாழ்க வளமுடன் என வாழ்த்தும் பயிற்சி வழங்கப்படுகிறது.

வாழ்த்து:

"வாழ்க வாழ்கவென் வாழ்க்கைத் துணைவர்
வாழ்க வாழ்கவென் குழந்தைகள் எல்லாம்
வாழ்க வாழ்க என்னுடன் பிறந்தோர்கள்
வாழ்க வாழ்கவென் நண்பர்கள் அனைவரும்
வாழ்க வாழ்கவென் தொழில்துறை அனபர்கள்
வாழ்க பகைவர்கள் வளமொடு திருந்தி
வாழ்க இவ்வுலகில் வாழ் மக்களெல்லாம்
வாழ்க வாழ்க இவ்வையகம் வாழ்க
வாழ்க அறநெறி வாழ்க மெய்ஞ்ஞானம்!" (ஞாக.பா.1500-8)

நமக்கு தீமை செய்தவர்களையும் ஏன் வாழ்த்த வேண்டும்?

வாழ்த்தும் போது தெய்வீக நிலையில், அமைதி நிலையில் இருந்து கொண்டு வாழ்த்த வேண்டும்.

இந்த முறையில் வாழ்த்தின் மூலம் உலகத்தையே மாற்றி அமைத்து விடலாம்.

நமக்குத் தீமை செய்தவரையும் ஏன் வாழ்த்த வேண்டும் என்றால், "அவர் அறியாமையினாலே தான் அவ்வாறு செய்தார், நம்முடைய கர்மச் சுமையின் விளைவு அவரைத் தீமை செய்ய இயக்கியது."

எனவே அவர் செய்தார், அவருக்கு உள்ளாக இயங்கிக் கொண்டிருப்பதும் எல்லாம் வல்ல முழுமுதற் பொருளே.

எனவே, அவரை மனதார வாழ்த்தி எனது தீய பதிவு ஒன்றை அகற்ற உதவிய அவருக்கு நன்றியும் செலுத்துவேன்" என்ற தத்துவ விளக்கம் நம் செயலுக்கு வந்து இயல்பாகி விட்டதென்றால், நாம் ஆன்மீகப் பாதையில் திடமாக முன்னேறிச் செல்கிறோம் என்பதற்கு அதுவே அறிகுறியாகும்.

வாழ்க பகைவர்கள் எதிரிகள் என்று வாழ்த்த வாழ்த்த என்ன நிகழும் தெரியமா?

வாழ்த்து எல்லா மந்திரங்கட்கும் மேலான திருமந்திரமாகும். ஒருவரை நாம் வாழ்த்தும் போது அந்த உயிருக்கும் நம் உயிருக்கும் ஒரு உயிர்த் தொடர்பு - சங்கிலித் தொடர்பு ஏற்பட்டு வாழ்த்து அதன் மூலம் பாய்ந்து வேலை செய்யும். ஒருவரை நாம் வாழ்த்தும் தகுதியைப் பெறுகிறோம்.

அந்த அளவுக்கு நமது பெருந்தன்மை தானே வளர்ச்சியடைகிறது. இந்த வாழ்த்து பேரறிவில் பதிவாகி அதன் மூலம் அடி மனத்திற்கும் பரவி நாளாக நாளாக நட்புணர்ச்சி வளர உதவும். வெறுப்புணர்ச்சி தானே மறைந்துவிடும்.

வாழ்க வளமுடன் என்ற மந்திரத்திற்கு வலு அதிகம். தவம் செய்து முடிக்கும் போது சொல்லும் வாழ்த்துக்கு இன்னும் வலிமை கூடுகிறது.

உதாரணமாக ஒரு வில்லில் அம்பு எய்வதற்கு எவ்வளவு தூரம் நாணை இழுக்கிறோமோ, அந்த அளவுக்கு அம்புக்கு வேகம் கூடும். அதுபோன்று மனம் எவ்வளவு அமைதி நிலையிலிருந்து வாழ்த்துகிறதோ அந்த வேகத்தில் அந்த வாழ்த்து செயலுக்கு வரும்.

வாழ்த்து என்பது வெறும் சொல் மட்டுமல்ல. அது ஒரு ஜீவகாந்த அலை. இந்த அலைக்கு ஐந்து வகையான இயக்கங்கள் உள்ளன.

1 மோதுதல் (Clash)
2 பிரதிபலித்தல் (Reflection)
3 சிதறுதல் (Refraction)
4 ஊடுருவதல் (Penetration)
5 இரண்டிற்கும் இடையே ஓடிக் கொண்டிருத்தல் (Interaction)

ஒருவர் மற்றவரை வாழ்த்தும்போது அந்த வாழ்த்து இருவருக்கிடையே இந்த வகையான அலையினை எழுப்பிவிடும். அவர் உங்களை பார்த்தாலும், பார்க்காவிட்டாலும் அவரது உயிரிலிருந்து நன்மையான அலை வீசிக் கொண்டே இருக்கும்.

சமுத்திரத்தின் மத்தியில் தோன்றும் அலை கரையைத் தொடுவது போல் வாழ்த்துபவரிடம் சென்று மீளும். வாழ்த்தும் போது நாம் அன்பையும் நல்லெண்ணங்களையும் விதைத்தால், நாம் வாழ்த்தியவரிடம் அதனைக் கொண்டு சேர்க்கும் வாழ்த்து அலை, அதனை மீளக் கொண்டு வருகையில் அதனை மேலும் விரிவாக்கி நமக்குக் கொண்டு வந்து சேர்க்கும்.

இதனால் நமது பகைவர்களும் நமக்கு தீமை செய்தவர்களும் மனம் மாறி நம்முடன் இணக்கமாக இருப்பார்கள்.

ஒற்றுமையின்றி பிணங்கி நிற்கும் ஒரு மகனைத் தந்தை தினசரி வாழ்த்திக் கொண்டே இருப்பாரானால் இருவருக்கும் இடையேயுள்ள உயிர்த் தொடர் மூலம் அவ் வாழ்த்துப் பரவி மகனுடைய மூளையில் பதிந்து அவனைச் சிறுகச் சிறுகத் திருத்தி தகப்பன் விருப்பப்படி நடக்கும்படி செய்துவிடும்.

கணவன் மனைவியிடையேயும் இப்படித்தான். இது நான் அனுபவமாக பல குடும்பங்களில் கண்ட உண்மையாகும்.

வாழ்த்தின் மூலம் தேவையான நன்மைகளும் கிட்டும். ஆதலால்தான் கடவுளைக் கூட வாழ்த்தும் பக்தர்களையும் பக்திப் பாடல்களையும் நாம் பார்க்கிறோம்.

கடவுளை வாழ்த்துவதன் மூலம் எல்லோரையும் வாழ்த்தும் நற்பழக்கத்தை மனிதன் ஏற்படுத்திக் கொண்டான். இதனால் 'மனவளம்' பெருகுவது நிச்சயம்.

"அருட்பேராற்றல் கருணையினால்,
உடல் நலம், நீளாயுள், நிறைசெல்வம்,
உயர்புகழ், மெய்ஞானம் ஓங்கி வாழ்க வளமுடன்"
என்று வாழ்த்தி பயன்பெறுவோம்.
.
"உண்ணும் உணவு உடல் மட்டும் பாயும்
எண்ணும் எண்ணங்கள் எங்குமே பாயும்."
.
" எண்ணம், சொல், செயலால் எவருக்கும்
எப்பொழுதும் நன்மையே விளைவிக்க
நாட்டமாயிரு".

## 6.நிலையற்ற வாழ்க்கையிலே கடமை செய்வோம்

மன்னர் ஒருவர் முனிவரிடம், “கீதையிலே, 'கடமையைச் செய், பலனை எதிர்பாராதே' என்று கூறப்பட்டுள்ளது. நல்ல முறையில் ஆட்சி செய்யவேண்டியது என் கடமை. அதனை மக்கள் பாராட்டவேண்டும் என்று நினைப்பது தவறா?” என்று கேட்டார்.

முனிவர் அதற்கு, “உன் கேள்விக்குப் பதில் சொல்ல, நீ ஒரு வாரம் என் ஆசிரமத்தில் சாப்பிட வேண்டும்” என்றார்.

மன்னரும் அவ்வாறே அங்கு சாப்பிட்டு வந்தார். சாப்பாடு மிகவும் சுவையாக இருந்தது. அதை இரசித்து அவர் சாப்பிட்டார்.

ஒரு வாரம் முடிந்தவுடன் முனிவர் கேட்டார், “இங்கு சாப்பாடு எப்படி இருந்தது?”

மன்னரோ, “நானே சொல்லவேண்டும் என்று நினைத்தேன். சாப்பாடு மிகவும் அருமையாக இருந்தது. இதைச் சமைத்த சமையல்காரரை என் அரண்மனைக்கு அழைத்துச் சென்று, தலைமைச் சமையல்காரராக நியமிக்கப்போகிறேன்" என்றார்.

முனிவர் சொன்னார், “சுவையாக சமைக்க வேண்டியது, ஒரு சமையல்காரரின் கடமை. இந்தச் சமையல்காரர் தன் கடமையைச் செய்தார்.

இப்போது அவருக்கு அரண்மனையில் வேலை கிடைத்துவிட்டது. கடமையைச் சரியாக செய்தவருக்கு அதற்கான பலன் கண்டிப்பாகத் தேடிவரும்”

ஆம். ஆசையின் அடுத்த நிலைதான் எதிர்பார்ப்பு. ஆசைக்கு அளவில்லை. பலனை எதிர்பார்க்கத் தொடங்கிவிட்டால், நம்மால் அந்தச் செயலில் நிச்சயம் வெற்றிபெற இயலாது. சரியாகச் செய்தால் அதற்கான பலன் நமக்குக் கிடைப்பதை, யாராலும் தடுக்க முடியாது.

கடமையைப் பற்றி பாரதியார் என்ன சொல்லுகிறார்? ”பிறர் துயர் தீர்த்தல், பிறர் நலம் வேண்டுதல்” என்ற சொல்லுகிறார்.

”கடமை யாவன தன்னைக் கட்டுதல்,
பிறர் துயர் தீர்த்தல், பிறர் நலம் வேண்டுதல்,
விநாயக தேவனாய், வேலுடைக் குமரனாய்
நாராயணனாய், நதிச்சடை முடியனாய்,
பிற நாட்டிருப்போர் பெயர் பல கூறி,” (பாரதியார்)

## கடமையும் வேதாத்திரியமும்.

"ஒரு பிடி உணவில் உலக ஒற்றுமை கண்டிடு
உழைப்பினால் பதில் உலகுக்குத் தந்திடு" (ஞாக.பா.)

என்பது வேதாத்திரி மகரிஷி அவர்களின் சத்திய வாக்காகும்.

தன்னை உருவாக்கி வளர்த்து காத்து வாழ வைக்கும் சமுதாயத்திற்கு அர்ப்பணிப்பு உணர்வுடன் தேவைக்கும் வாய்ப்புக்கும் ஏற்ப அறிவாற்றலையும் உடலாற்றலையும் கொண்டு உழைப்பின் மூலம் கடனைத் தீர்க்க எடுக்கும் முயற்சியே கடமையாகும்.

சமுதாயத்தின் செல்வ வளம் பெருக ஒவ்வொருவரும் உழைப்பையும் அறிவையும் பயன்படுத்த வேண்டியதே கடமை எனப்படும்.

”கடமையை உணர்ந்திடு காலத்தில் செய்திடு
உடம்புக் கு ம நல்லது உள்ளமும் அமைதியாம்.” (ஞாக.பா.400)

## ஐவகைக் கடமைகள்

தான், குடும்பம், சுற்றம், ஊர், உலகம் என்ற ஐவகைக் கடமைகள் வயது நிரம்பிய ஒவ்வொருவருக்கும் உண்டு.

தனது உடல்நலம், பொருள்வளம், கல்வியறிவு, திறமை, சூழ்நிலையமைப்பு இவற்றைக் கணித்துக் கொண்டு மனிதன் ஐவகைக் கடமைகளைச் செய்துதான் ஆகவேண்டும்.

தன்னையும் காத்துக்கொண்டு, குடும்பத்திற்கும், சுற்றத்தாருக்கும், ஊருக்கும், உலகத்திற்கும் நலம் செய்ய வேண்டும்.

"உனக்கும் நல்லதாய் ஊருக்கும் நல்லதாய்
நினைப்பதும் செய்வதும் நித்தியக்கடன்" (ஞாக.பா.412)

குறுகிய எண்ணத்தோடு பொருட்பற்றுதலை அடிப்படையாகக் கொண்டு பயன்கருதிச் செயல் செய்வது காம்யகர்மம் ஆகும்.

அகண்ட அறிவின் நிலையில் உயிரினங்களின் தேவைகளை யுணர்ந்து இன்ப துன்ப இயல்பறிந்து நற்பயன் கருதிச் செயலாற்றும் பேரறிவின் திறமை மிக்க செயல் நிஷ்காம்ய கர்மம் எனப்படும்.

நிஷ்காம்ய கர்மத்தால் நல்வாழ்வு, இன்பம், அறிவு, திடம், பண்பு முதலியன ஏற்படுகின்றன.

சமுதாயத்தில் எல்லோரும் நலத்தோடும் வளத்தோடும் மகிழ்ச்சியோடும் அமைதியோடும் வாழ வேண்டுமானால் நிஷ்காம்ய கர்மம் என்னும் கடமை நெறியே சிறந்த வாழ்க்கை வழியாகும்.

”ஆக்கமுறை யால் அன்றிப் பிறர் அழைத்து
ஆக்கிவைத்த பொருள் கவர்ந்து பிழைக்க மாட்டோம்.
நீக்கமற நிறைந்தநிலை நினைவிற் கொண்டே
நிலையற்ற வாழ்க்கையிலே கடமை செய்வோம்.” (ஞாக.பா.406)

'சமுதாயத்திற்கு நன்மை செய்ய வேண்டும்' என்று பேசினால் மட்டும் போதுமா? அது செயலிலும் இருக்க வேண்டுமா என்பதை, விவேகானந்தர் கதை மூலம் விளக்கியிருக்கிறார்.

அரசன் ஒருவன் இருந்தான். அவன் அரசவையில் அதிகாரிகள் பலர் இருந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவரும், “நான் தான் அரசனிடம் ஈடுபாடு கொண்டிருக்கிறேன். அரசனுக்காக என் உயிரையும் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன்” என்று கூறிக் கொண்டிருந்தார்கள்.

அரசவைக்கு துறவி ஒருவர் வந்தார். அரசன் அவரிடம், “இந்த அளவுக்கு ஈடுபாடு உடைய அதிகாரிகளைப் பெற்ற அரசன் என்னைப்போல் வேறு யாரும் இருக்க இயலாது” என்றான்.

துறவி புன்சிரிப்புடன், “நீ சொல்வதை நான் நம்பவில்லை,” என்றார். அரசன், “நீங்கள் வேண்டுமானால் அதைச் சோதித்துக் கொள்ளலாம்” என்றான்.

சிறிய ஒரு சோதனை வைத்தார் துறவி. "அரசனின் ஆயுளும் ஆட்சியும் பல்லாண்டுகள் நீடிப்பதற்கு, நான் பெரிய ஒரு வேள்வி செய்யப் போகிறேன். அதற்குத் தேவையான பாலுக்காக ஓர் அண்டா வைக்கப்படும். அதில் அதிகாரிகள் ஒவ்வொருவரும் இரவில் ஒரு குடம் பால் ஊற்ற வேண்டும்,” என துறவி கூறினார்.

அரசன் புன்முறுவலுடன், “இதுதானா சோதனை?” என இகழ்ச்சியாகக் கேட்டான்.

பால்-தண்ணீர்: பின் அரசன், அதிகாரிகளை அழைத்து நடக்க இருப்பதைக் கூறினான். அந்த யோசனைக்கு அதிகாரிகள் அனைவரும் தங்களின் மனபூர்வமான சம்மதத்தைத் தெரிவித்தனர்.

நள்ளிரவில் எல்லோரும் அந்த அண்டாவின் அருகில் சென்று, தங்கள் குடங்களில் இருந்ததை அதற்குள் ஊற்றினார்கள்.

மறுநாள் காலையில் பார்த்தபோது அண்டா நிறையத் தண்ணீர்தான் இருந்தது! திடுக்கிட்ட அரசன் அதிகாரிகளை அழைத்து விசாரித்தான்.

அப்போது, 'எல்லோரும் பாலைத்தான் ஊற்றப் போகிறார்கள். நான் ஒருவன் மட்டும் அதில் தண்ணீர் ஊற்றினால், அது மற்றவர்களுக்கு எப்படித் தெரியப் போகிறது?' என்று ஒவ்வொருவரும் நினைத்து, எல்லோரும் தண்ணீரையே ஊற்றினார்கள் என தெரிய வந்தது.

துரதிர்ஷ்டவசமாக நம்மில் பலருக்கும் இதே எண்ணம்தான் இருக்கிறது.

உலகத்தில் சமத்துவக் கருத்து நிறைந்திருக்கும்போது, நான் ஒருவன் மட்டும் கொண்டாடும் தனிச்சலுகை யாருக்குத் தெரியப் போகிறது என்கிறார் ஒருவர்.

எனவே எல்லா மக்களையும் சமமாக நினைக்கும் ஞானத்தைப் பெற முயற்சிக்க வேண்டும்.

நம்முன் இருக்கும் கடமைகளைச் செய்வதுதான், உயர்வு பெறுவதற்கு ஒரே வழி.

நம் கடமைகளைச் செய்வதன் மூலம் நம்மிடம் இருக்கும் வலிமையைப் பெருக்கிக்கொண்டே சென்று, இறுதியில் உயர்ந்த நிலையை அடைந்து விடலாம். சுவாமி விவேகானந்தர் காட்டிய வழியில் வீறுநடை போடுவோம்..

## 7. எண்ணமதை வலிமை பெறச்செய்வோம்.

”எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்” (திருக்குறள் 666)

எண்ணத்தின் வலிமை பற்றி Dr.M.S.உதயமூர்த்தி சொல்லுகிறார்.

சூரிய கதிர்களை ஒருமுகப்படுத்தினால் அது தீயாக உருபெறுகின்றது

எண்ணங்களை ஒருமுகப்படுத்தினால் அவை வலிமை பெறுகிறது
ஒவ்வொரு காரியத்திற்கும் ஒரு காரணம் இருக்கிறது.

காரணம் காரியத்தில் முடிகிறது
எண்ணம் ஒரு காரணம். .பலன் காரியம்

எண்ணங்கள் தான் உணர்ச்சியாக, சக்தியாக உடலில் மாறுகின்றன. எண்ணங்கள் நமது உடலின் ரசாயன அமைப்பையே மாற்றும் வல்லமை படைத்தவை

மனிதனின் எண்ணம் நம்பிக்கையாக வேர்விடும் போது அசாதாரண சக்தி பெறுகிறது.

அந்த சக்தி எதைச் சாதிக்க விரும்புகிறோமோ அதை சாதிக்கின்றது..
எண்ணம்தான் நம்பிக்கையாய், சக்தியாய், உடலில் மாற்றத்தை தோற்றுவிக்கின்றது

நமக்கு நாமே எண்ணங்களை சொல்லிக் கொள்வதன் மூலம்(auto suggestions ) நாம் வளர முடியும், முன்னேற முடியும்

எண்ணங்களுக்கு ஏற்ப வாழ்க்கை மலர்கிறது

நம் எண்ணங்கள் எப்படியோ அப்படிதான் நாம் ஆகிறோம்
நாம் எப்படியோ அப்படியேயான எண்ண அலைகள் நம்மிடமிருந்து உற்பத்தி ஆகின்றன

ஒவ்வொரு நாளும் உறங்கச் செல்லும் முன்
""நான் எல்லா வகையிலும் முன்னைவிட சிறந்து வருவதை உணர்கிறேன்" என்று நம் மனதிற்குள் சொல்லிக் கொள்ளும் போது அந்த எண்ணங்கள் வியத்தகு மாற்றங்களை ஏற்படுத்த வல்லது.

எண்ணங்கள் மகத்தான சக்தி கொண்டவை. நினைத்ததை முடிப்பவை. எண்ணத்தை வலிமையாக இசைத்துக் கொண்டு தின்று விளையாடி இன்புற்று வாழ்வீர்களாக" என்று பாடுகிறார் பாரதி.

"இன்று புதிதாய்ப் பிறந்தோம் என்று நீவீர்
எண்ணமதைத் திண்ணமுற இசைத்துக் கொண்டு
தின்று விளையாடி இன்புற்று இருந்து வாழ்வீர்
தீமை எல்லாம் அழிந்து போம் திரும்பிவாரா" (பாரதியார்)

## எண்ணத்தின் வலிமை - வேதாத்திரியம்

"எண்ணம் வேறு, நீ வேறு அல்ல, சிந்தித்துப் பார், அது காலம், இடம், பருமன், இயக்கம் என்ற நான்கு வித தன்மைகளோடு இயங்கிக் கொண்டும், அவற்றைக் கடந்து மௌன நிலையடைந்தும் மாறி மாறி நிற்கும் மாயாஜாலப் பொருள், உள் எண்ணத்தின் நிலையை அறிந்து கொண்டால் நீ உன்னை அறிந்து கொண்டாய் என்பது தான் பொருள்.

அது வரையில் சந்தர்ப்பங் கிடைக்கும் போதெல்லாம் எண்ண த்தைப் பற்றி ஆராய்ந்து கொண்டே இரு. எண்ணத்தை நிறுத்த முயலாதே, அது அதிகமாக அலையும், அதை அறிய முயன்றால் அப்போது தான் அது தானே சிறுகச் சிறுக அமைதி பெறும்.

எண்ண இயக்கம் தான் வாழ்வு. அது உடலில் இரத்த ஓட்டம் இருக்கும் மட்டும், நித்திரை காலம் தவிர மீதி நேரத்தில் இயங்கிக் கொண்டே தான் இருக்கும்.

எண்ணத்தைப் பண்படுத்தவும் பயன்படுத்தவும் வழிகாண வேண்டும், பழக வேண்டும். அந்தப் பெரு நிதியை அழிக்க வேண்டுமென்று நீ வீணான முயற்சி கொள்ளாதே!

அது தான் மரணம் என்ற இடத்தில் தானாகவே நின்று விடப் போகின்றதே! எண்ணம் நின்றுவிட்டால் நீ என்பது தனித்து ஏது? .

பல வருடங்களில் எண்ணிறந்தோர்களால் செய்து முடிக்கக் கூடிய காரியங்களை நீ ஒரு நிமிஷத்தில் எண்ணத்தால் திட்டமிடலாம்.

இத்தகைய சக்தியுடைய நீ எப்போதுமே எதிகாலத்தைப் பற்றி திட்டமிட்டுக் கொண்டிருக்காதே.

இதனால் அவ்வப்போது செய்ய வேண்டிய கடமைகளை மறந்து விடுவாய். செயலோடு சிந்தனையை இணைத்து நிற்பதே மிகவும் உயர்வாகும்.

அது நழுவாமல் இருப்பதற்கு விழிப்போடு பல நாட்கள் பழக வேண்டும்.

உனது உடல் இன்பங்களையும், குடும்பத்தையும் மட்டும் ஞாபகத்தில் கொண்டு செயலாற்றினால், உனக்கு வாழ்வில் சலிப்பும், துன்பங்களும் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும்.

இயற்கை அமைப்பை, நிகழ்ச்சிகளை, எண்ணத்தின் ஆற்றலை, சமுதாயத்தை, உலகத்தை, ஆகாயத்தில் மிதந்து உலவிக் கொண்டிருக்கும் பலகோடி அண்டங்களை அடிக்கடி ஞாபகப்படுத்திக் கொள்.

இவைகளோடு உனது அறிவை, இன்ப துன்ப அனுபோகங்களை அடிக்கடி ஒப்பிட்டுப் பார். இதனால் உடலுக்கும் அறிவுக்கும் ஒருங்கே அமைதி தரும் இடையறாத இன்ப ஊற்று பெருக ஆரம்பித்துவிடும். "

### எண்ணம்:

"எண்ணமே ஒரு நாடக மன்றம் போல்.
எண்ணமே அதில் எண்ணற்ற நடிகர்கள்,
எண்ணமே அதைப் பார்ப்போர், ரசிப்போராம்.
எண்ணமே அதன் நிர்வாகி, உடையவன்." ."(ஞாக.பா.1525)

### எண்ணம் நற்பயனாக :

"எண்ணத்தை எண்ணத்தால் எண்ணி எண்ணி
  எண்ணத்தின் இருப்பிடமும் இயல்பும் கண்டு,
எண்ணத்தை எண்ணத்தில் நிலைக்கச் செய்தால்,
  எண்ணமே பழக்கத்தால் தெளிந்து போகும்;
எண்ணமது எழும்போதே ”இது ஏன்?” என்று
  எண்ணத்தால் ஆராய்ந்தால், சுலப மாக
எண்ணத்தின் காரணமும் விளைவும் காணும்
  எழும்எண்ணம் யாவும் நற்பயனாய் மாறும்." ."(ஞாக.பா.1529)

### எண்ணத்தின் சிறப்பு :

"எண்ணம்,சொல், செயல்களெல்லாம் ஒன்றுக்கொன்று
இணைந்துள்ள தன்மையதைக் காணும்போது,
எண்ணமே அனைத்துக்கும் மூலமாகும்
இன்பதுன்பம் விருப்பு வெறுப்பு உயர்வு தாழ்வு;
எண்ணத்தின் நாடகமே, பிரபஞ்சத்தின்
இரகசியங்கள் அனைத்துக்கும் ஈதே பெட்டி;
எண்ணமே இல்லையெனில் ஏதுமில்லை
எண்ணத்துக் கப்பாலும் ஒன்றுமில்லை."(ஞாக.பா.1531)

வாழ்க வளமுடன்.

# 8.வறுமையை மண்மிசை மாய்ப்பேன்

சுவாமி விவேகானந்தர், பரிவ்ராஜகராக பாரதம் முழுதும் பயணித்தபோது லட்சக் கணக் கா ன் மனிதர்கள் எலும்பும் தோலுமாக உடலில் தெம்பு இல்லாமல், உள்ளத்தில் சோர்வைச் சுமந்து கொண்டு நடைப் பிணங்களாக இருப்பதைக் காண்கிறார்.

சுவாமிஜியின் கனிந்த இதயத்தில் இரக்கம் சுரக்கிறது. அவர்களுடைய நிலை கண்டு ரத்தக் கண்ணீர் வடிக்கிறார்.(பாரதியார்)

“கஞ்சி குடிப்பதற்கு இலார் அதன்
காரணங்கள் இவை என்னும் அறிவும் இலார்
பஞ்சமோ பஞ்சம் என்றே -நிதம்
பரிதவித்தே உயிர் துடி துடித்துத்
துஞ்சி மடிகின்றாரே இவர்
துயர்களைத் தீர்க்க ஓர் வழி இல்லையே…” (பார)

என்று மகாகவி பாரதி பரிதவிப்பது விவேகானந்தரின் எதிரொலியாகத் தான்.

**“விதவையின் கண்ணீரைத் துடைக்க முடியாத, ஓர் அனாதையின் வாய்க்கு ஒரு ரொட்டி துண்டு கொடுக்க முடியாத கடவுளோ, மதமோ என் நம்பிக்கைக்கு பாத்திரமானதல்ல..”** என்ற சொற்கள் விவேகானந்தரின் வாக்கிலிருந்து வருகிறது என்றால், நமது ஆஷாடபூதிகள் மதம், சாஸ்திரம் என்ற பெயரால் சமூகத்தில் ஏற்படுத்தியிருந்த குழப்பங்களால் தானே?

“இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்”

-என்ற திருவள்ளுவரின் (குறள்- 1062) வாக்கல்லவா இரண்டு ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் விவேகானந்தரின் திருவாக்காக வெளிப்படுகிறது?

”வறுமை நிலைக்குப் பயந்து விடாதே
வறுமை நிலைக்குப் பயந்து விடாதே
திறமை இருக்கு பயந்து விடாது!” என்று பாடினான் ஒரு புலவன்.

வாழ்க்கையில் முன்னேறுவதற்கு வறுமை ஒரு காரணமல்ல. வறுமையை அயராத உழைப்பினால் விரட்டி விடலாம். வறுமையைச் செம்மையாக்கிச் சாதனைகள் படைத்தவர்களைப் பாருங்கள்.

- ஏழை நெசவுத் தொழிலாளி வேதாத்திரி மகரிஷி வறுமையை தனது உழைப்பால் போக்கியவர்.
- எடிசன், ரைட் சகோதரர்கள், மேரி கயூரி, மைக்கேல் பாரடே, கலிலியோ போன்ற விஞ்ஞானிகள் வறுமையில் வாழ்ந்து – வறுமையை உழைப்பால் தகர்த்தவர்கள்.
- ஹென்றிபோர்டு, ஜி.டி.நாயுடு (ஓட்டல் சர்வர்) வறுமையைச் சந்தித்தவர்கள்.
- ”டி” யைக் கண்டுபிடித்த லிப்டன் வ றமை யில் உழன்றவர்.
- சாதாரண மீனவக் குடும்பத்தில் பிறந்தவர்தான் அப்துல்கலாம்.
- படுக்கக்கூட இடம் இல்லாத வீட்டில் வசித்தவர் டர் க டர் அம்பேத்கார்.
- லண்டன் தெருக்களில் உண்ண உணவின்றி ஒரே ஒரு கிழிந்த ஆடையை உடுத்திக் கொண்டு திரிந்த பெர்னாட்ஷா வறுமையில் உழன்றவர்.
- அமெரிக்க முன்னாள் குடியரசுத் தலைவர் உட்ரோ வில்சன், ஆண்ட்ரு ஜான்சன் கொடிய வறுமையில் இருந்தவர்கள்.
- உலகக் கோடீஸ்வரர் ”ராக்பெல்லர்” கிளார்க்காகக் கஷ்டப்பட்டவர்தான்.
- ”தாய்” என்ற புகழ்பெற்ற நூலைப் படைத்தவர் ரஷ்ய எழுத்தாளர் மாக்சிம் கார்க்கி செரு ப்ப த் தைக்கும் கடையில் வேலை பார்த்தவர்.
- இளமையில் கஷ்டப்பட்டு காப்பிக் கடை நடத்தியவர்தான் மலேசியப் பிரதமர் டாக்டர் மாதீர் முகமது காய்.
- மலேசிய அமைச்சர் டத்தோ சாமிவேலு கூலியாளின் புதல்வர். முதலாளி வீட்டில் கார் கழுவுதல் போன்ற எடுபிடி வேலை செய்தவர்.
- ரஷ்யப் புரட்சியாளர் ”லெனின்” வறுமையான குடும்பத்தில் தோன்றியவர்.
- வால்ட் டிஸ்னி ரயிலில் செய்தித்தாள் விற்றும், ஆம்புலன்சில் உடல் சுமப்பவராகவும் கஷ்டப்பட்டவர்தான்.

- முன்னாள் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி கல்வி கற்கக்கூட வசதியில்லாத வறுமையில் வாழ்ந்தவர்.
- முன்னாள் முதல்வர் காமராஜ் சிறிய வயதில் பெட்டிக் கடையில் வேலை பார்த்தவர்.
- முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். இளமையில் வறுமையில் வாடியவர்.
- வானதி பதிப்பகம் திருநாவுக்கரசு, வி.ஜி.பன்னீர்தாஸ் போன்றவர்கள் வறுமையை எதிர் கொண்டவர்கள்.
- நீதிமன்றத்தில் பியூனாக இருந்தவர்தான் மகாராஷ்டிர மாநில முன்னாள் முதல்வர் சுசீல்குமார் ஷிண்டே.
- சோவியத் அதிபர் கோர்பச்சேவ் மெ்ககானிக்காகத் தான் வாழ்க்கையை தொடங்கினார்.
- ஆனந்தவிகடன் அதிபர் எஸ்.எஸ்.வாசன் கொடிய வறுமையில் வாழ்ந்தவர்தான்.
- மகாகவி பாரதியார் வறுமையாகவே வாழ்ந்தவர்தானே!

இதனால் தான் வேதாத்திரி மகரிஷி சொல்கிறார். "சமுதாயத்தில் பொருள் வறுமை கிடையாது... அறிவு வறுமைதான் இருக்கிறது."

# 9. நான் என்ற தத்துவமே நாமா யுள்ளோம்

உலகத்தின் காட்சி பொய்யோ மெய்யோ? மிக உயர்ந்த தத்துவ ஆராய்ச்சியின் கண் வெளிப்பட்ட இந்தக் கேள்விக்கு பாரதியார் சரியானதொரு விடையையும் பெறுகிறார்.

தெய்வநிலையில் கடைசி வடிவம் மனிதன். தெய்வமே காற்றாக, கனலாக, கோளாக, மண்ணாக, புல்லாக, புழுவாக விலங்கினமாக, தானுமாக இருப்பதை உணர்ந்து கொள்கிறார்.

அந்த உணர்வில் தெய்வமே அனைத்துமாக இருக்கிறது என்பதற்குப் பதிலாக, அனைத்துமாக வந்து கடைசியாக தானுமாக இருப்பதால் அனைத்துத் தோற்றமும் நானே என்கிறார்.

வானில் பறக்கின்ற புள்ளெலாம் நான்;

மண்ணில் திரியும் விலங்கெலாம் நான்;

கானிழல் வளரும் மரமெலாம் நான்,

காற்றும் புனலும் கடலுமே நான்

விண்ணில் தெரிகின்ற மீனெலாம் நான்
வெட்ட வெளியின் விரிவெலாம் நான்,
மண்ணில் கிடக்கும் புழுவெலாம் நான்,
வாரியிலுள்ள உயிரெலாம் நான்

கம்பனிசைத்த கவியெலாம் நான்,
காருகர் தீட்டும் உருவெலாம் நான்;
இம்பர் வியக்கின்ற மாட கூடம்
எழில் நகர் கோபுரம் யாவுமே நான்

இன்னிசை மாத ரிசையுளேன் நான்;
இன்பத் திரள்கள் அனைத்துமே நான்;
புன்னிலை மாந்தர் தம் பொய்யெலாம் நான்;
பொறையருந் துன்பப் புணர்ப்பெலாம் நான்

மந்திரங் கோடி இயக்குவோன் நான்,
இயங்கு பொருளின் இயல்பெலாம் நான்,
தந்திரங் கோடி சமைத்துளோன் நான்,
சாத்திர வேதங்கள் சாற்றினோன் நான்

அண்டங்கள் யாவையும் ஆக்கினோன் நான்,
அவை பிழையாமே சுழற்றுவோன் நான்;
கண்டநற் சக்திக் கணமெலாம் நான்,
காரண மாகிக் கதித்துளோன் நான்

நானெனும் பொய்யை நடத்துவோன் நான்;
ஞானச் சுடர்வானில் செல்லுவோன் நான்
ஆனபொருள்கள் அனைத்தினும் ஒன்றாய்
அறிவாய் விளங்குமுதற் சோதிநான்! (பாரதியார்)

வேதாத்திரிய சிந்தனைகள்- "நானே நாம்" :-

நான் என்ற தத்துவமே நாமா யுள்ளோம்
  நாடுகள் பலவற்றில் வாழுகின்றோம்
ஊன் உருவம் வரையில் அறிவெல்லை யாக்கி
  ஒருவருக் கொருவர் இன, தேச, சாதி,
தான், தனது எனும் பேதம் கொண்டு வாழ்வில்
  தனித்தியங்கித் துன்புற்றோம், ஆழ்ந்தா ராய்ந்து,
ஆன்மநிலை யறிந்ததனால், பேதமற்ற
  அரூபசக்தி நிலையில் நாம் ஏகனானோம்." (ஞாக.பா.876)

- இருப்புநிலை என்ற பரம்பொருளும் அதன் எழுச்சி நிலையாகிய விண்ணும் இணைந்தே எல்லா தோற்றங்களும், எல்லா உயிரினங்களும், மனிதன் உட்பட என்பதை நாம் உணரவில்லை.
- இந்தக் காரணத்தால், தான், தனது என்று அறிவு குறுகிய நிலையில் எல்லை கட்டி இயங்குவதால் சாதி, மதம், மொழி, தேசம் என்ற நிலையில் நம்மைத் தனிப்படுத்தி வாழ்க்கையில் துன்பப் படுகின்றோம்.

- நமது பெற்றோர், அவர்கள் பெற்றோர், அவர்கள் பெற்றோர்... என்று பின்னோக்கி ஆராய்ந்து பார்த்தால் நாம் அனைவரும் ஒருவரின் பிள்ளைகளே என்ற உண்மை தெரியவரும்.
- அவருக்கு மூலம் இரண்டு விலங்கினங்கள் ஆகும். விலங்கினங்கள் ஐந்து அறிவு. அவைகளுக்கு முன் நான்கு, மூன்று, இரண்டு, ஓர் அறிவு தாவரம்வரை செல்லும்.
- அவைகளுக்கு மூலம் பஞ்ச பூதங்கள். இதில் முதல் தத்துவம் விண். விண்ணுக்கு மூலம் சுத்தவெளி எனும் பரம்பொருள்.
- இந்த நிலையில் நாம் நம்மை நோக்கிப் பார்த்தோமானால் நம் எல்லோருக்கும் மூலம் ஒன்றே.
- இப்போது நாம் அனைவரும் ஒருவரே என்ற உண்மை அறிகிறோம்.

உருவ நிலையில் நாம் வேறுவேறு. அருவ நிலையில் நாம் ஒன்றே. அதுவே இறைநிலை..

பாரதியாரின் இறையில் கோட்பாடு சுருக்கமும் தெளிவும் நுட்பமும் ஆழமும் உண்மையும் எளிமையும் கொண்டது.

தெய்வம் ஒன்றே. அத்தெய்வமே வெட்டவெளி. அவ்வெளியே அறிவாக எல்லா பொருள்களுடும் உள்ளும் புறமுமாக நிறைந்து ஓங்கி ஆட்சிப்படுகிறது. அந்த ஆட்சியில் பிரபஞ்ச் பொருட்கள் அனைத்திலும் தன்னைக் காண்கிறார்

"இறையுணர்வால் எவ்வுயிரும் ஒன்றென் றாகும்
ஈசனிலே தான். தன்னிலே ஈசனான
இறையுணர்வே தத்துவத்தின் முடிந்த பேறு,
இப்பேறே அகத்தவத்தின் முடிவு மாகும்."(ஞா.க.1492)

என்கிறார் வேதாத்திரி மகரிஷி.

வெட்டவெளி என்ற தனிப்பரம் பொ ருளே உணர்ந்து கொண்ட பாரதியார், அது எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை அந்தப் பரம்பொருளே அருள வேண்டும் என்று வேண்டுதல் செய்கிறார்.

"அறிவிலே தெளிவு. நெஞ்சிலே உறுதி,
அகத்திலே அன்பினோர் வெள்ளம்,
பொறிகளின் மீது தனியர சாணை
பொழுதெலாம் நினதுபே ரருளின்
நெறி யலே நாட்டம்,கரும யோகத்தில்
நிலைத்திடல் என்றிவை யருளாய்
குறி குணமுதும் இல்லதாய் அனைத்தாய்க்
குலவிடு தனிப்பரம் பொருளே!" (பாரதியார்)

சூரியன் வரவால் இருள் நீக்கம் போலப் பாரதியாரின் இறையியல் சிந்தனைத் தெளிவு கவிதை மொழியால் வெளிச்சமாகிறது.
அதே சிந்தனையில் வெளிப்பாடு சற்று ஆழமாக வேதாத்திரியாரிடம் வெளிப்படுகிறது.

"இறைவா உன் இருப்புநிலை முற்றறிவாய், வெளியாய்,
இயக்கநிலை சுழலையாம் விண்யெனவும் காட்டி
மறைபொருளாம் இருப்போடு இயக்க அலை கூட,
இவ்விரண்டும் இணைந்த நிலை வான்காந்தமென்று,
நிறைந்து உள்ள காந்தமதே, விண் கூட்டுக்கேற்ப,
நேரழுத்தம் ஒலி, ஒளி,சுவை மணமும் மனமாய்ப்
புறநிலையில் அகநிலையில் உனையறிவாய்க் காட்டி
போதனை செய் உலகுக்கிவ் வுண்மை என்னுள் ஏற்றேன்."
(ஞா.க.1703)

என்ற மெய்ப்பொருள் உணர்தலே மேலானக் கடமையாகக் கொள்கிறார் வேதாத்திரி மகரிஷி.

சித்தர்கள் என்று கூறிப் படித்திருக்கிறோம். ஒரு சித்தரைக் கூட நாம் பார்த்தது இல்லை.

ஆனால் நம்மோடு வாழ்ந்து உரையாடி ஞானவிளக்கம் தந்த தற்கால சித்தர்கள் பாரதியும் வேதாத்திரியும் ஆவார்கள்.

சித்தர்கள் வரிசையில் பத்தொன்பதாவது மற்றும் இருபதாவது சித்தர்களாக காட்சி தருகிறார்கள் என்றால் அது மிகையில்லை.

## 10. செத்த பிறகு சிவலோகமா? வைகுந்தமா?

ஒரு நாள், ஒரு ஜென் துறவியைப் பார்க்க ஒரு சாமுராய் வந்து இருந்தார்.

நான் சொர்க்கம் மற்றும் நரகத்தைப் பற்றி அறிய விரும்புகிறேன்," என்று சாமுராய் அந்த ஜென் துறவியிடம் கூறினார். இவைகள் உண்மையில் இருக்கிறதா என்றும் கேட்டார்.

அந்த ஜென் துறவி அவரைப் பார்த்து, “நீங்கள் யார்?” என்று கேட்டார்.

“நான் ஒரு சாமுராய்” என்று பெருமைமிக்க அந்த போர்வீரன் சொன்னார்.

உடனே அந்த ஜென் துறவி,

”ஹா!. இதுபோன்ற நுண்ணறிவுள்ள விஷயங்களை நீங்கள் புரிந்து கொள்ள முடியும் என்று நீங்கள் நினைப்பது எப்படி?

நீங்கள் ஒரு கொடூரமான, மிருகத்தனமான போர்வீரன்! உங்கள் முட்டாள்தனமான கேள்விகளால் என் நேரத்தை வீணாக்காதீர்கள்," என்று அந்த துறவி கூறி, சாமுராயை தன் இடத்தை விட்டு விரட்ட தன் கையை அசைத்தார்.

கோபமடைந்த சாமுராய் துறவியின் அவமானங்களை தாங்கி கொள்ள முடியாமல். தன் வாளை எடுத்து அவரைக் கொலை செய்ய ஓங்கினார்.

“உடனே, இது நரகம் என்று அந்த துறவி அமைதியாக பதில் அளித்தார்”.

சாமுராய் அதிர்ச்சியடைந்தார். அவன் முகம் மென்மையாகி விட்டது. அந்த ஜென் துறவியின் ஞானத்தால் தாழ்த்தப்பட்ட அவர், தனது வாளை விலக்கி அவர் முன் வணங்கினார்.

அப்பொழுது ,

“இது சொர்க்கம்,” என்று ஜென் துறவி அமைதியாக கூறினார்.

பாரதியின் பாடல்களிலே எனக்கு மிகவும் பிடித்த பாடல் இது.

செத்த பிறகு சிவலோகம் வைகுந்தம்
சேர்த்திடலாம் என்றே எண்ணி இருப்பார்
பித்த மனிதர் அவர் சொல்லுஞ் சாத்திரம்
பேயுரை யாமென்றிங்கு ஊதேடா சங்கம்!!!

இத்தரை மீதினிலே இந்த நாளினில்
இப்பொழுதே முக்தி சேர்த்திட நாடிச்
சுத்த அறிவு நிலையிற் களிப்பவர்
தூயவ ராமென்றிங்கு ஊதேடா சங்கம்!!!

பொயுறு மாயயை பொய்யெனக் கொண்டே
புலன்களை வெட்டிப் புறத்தில் எரிந்தே
ஐயுறல் இன்றி கழித்திருப்பார் அவர்
ஆரிய ராமென்றிங்கு ஊதேடா சங்கம்!!!

மையுறு வாள்விழி யாரையும் பொன்னையும்
மண்ணெனக் கொண்டு மயக்கற் றிருந்தாரே
செய்யுறு காரியம் தாமன்றிச் செய்வார்
சிதார் களாமென்றிங்கு ஊதேடா சங்கம்!!! (பாரதியார்)

- செத்த பிறகு சிவலோகம் வைகுந்தம் என்று பித்த மனிதர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.
- வாழும் காலத்தில் சுத்த அறிவு நிலையில் களிப்பவர்களே தூய வாழ்க்கை நடத்துபவர்கள்.
- வாழும் காலத்தில் முக்தி பெற வாழ்வதுதான் வாழ்வு..
- ஐமபுலன்களில் உழன்று கொண்டிருக்கும் மானுடம். பொன்னையும் மண்ணையும் உண்மையென்று வாழ்ந்து கொண்டிருக்கின்றனரே?
அறிவின் முழுமையே சொர்க்கம். அறிவின் வறுமையே நரகம்.
- அறிவின் உயர்நிலையில் அன்பும் கருணையுமாய் வாழ்வதே செர்க்கம். அறிவின் வறுமை தரும் ஆணவம், கன்மம், மாயையில் வாழ்வது நரகம்.
- உடலாலோ. மனதாலே யாருக்கும் துன்பம் தராமல் வாழ்வதும், துன்பத்தைக் காணுமிடத்து அதை முடிந்த அளவு போக்குன்ற

அன்பைப் பெருக்குவதும் சொர்க்கம். இதற்கு மாறுபட்டு வாழ்தலே நரகம்.

- மூலத்தைப் பற்றிய ஞானத்தைத் தருகிறது வேதாத்திரியம். வேதாத்திரியத்தில் இறைத் தத்துவம் நமக்கு முக்தியைத் தரவல்லது.
- ”தத்துவத்திற்கு விஞ்ஞானப் பார்வை தருவது அவ்வளவு எளிதல்ல.
- தத்துவத்தை விஞ்ஞானப் பூர்வமாக உணரும் துணிவும், மெய்ஞானத்தை தத்துவார்த்தமாக அலசி ஆராய்க்கிற அறிவுத் திறனும் கொண்ட ஒரு மகான்தான் இந்த இணைப்பைத் தரமுடியும். அதைத் தருபவரே வேதாத்திரி மகரிஷி.
- ஞாலத்தின் மூலத்தினை உணர்ந்த அதன் தன்மைகளை ஆராய்ந்தறிவது ஞானத்தில் முதல்நிலை.
- அத் தன்மைகளுடைய மூலம் எவ்வாறு ஞாலமாகிறது என்னும் தன்மாற்றச் சரித்திரத்தைத் தெளிந்து உணர்வது ஞானத்தில் இரண்டாம் நிலை.
- ஞானத்தின் இரு நிலைகளையும் கடந்து. எள்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர்போல பாவித்து அனைத்துயிருக்கும் ஒத்தும் உதவியும் வாழ்கின்ற பக்குவத்தை பெறுதல் ஞானத்தின் மூன்றாம் நிலை.
- ஞானத்தின் மூன்றாவது நிலையில் மனித அறிவு முழமையடைகிறது. ”அறிவின் முழுமை அது முக்தி” என்பது வேதாத்திரியம்.
- முக்தியின் வெளிப்பாடு அன்பு. அறிவின் முழமையாகிய முக்தி என்பது நாம் முயன்று முயன்று அடையவேண்டிய நிலை.
- வாழ்கின்ற போதுதான் முக்தி என்ற சொல்லுக்கு அர்த்தமுண்டு.
- வாழ்க்கை முடிந்து சடப்பொருளான பிறகு, அவரே இல்லை என்றாகிவிட்ட பிறகு, அவர் முக்தி அடைந்தார் என்றால் அதில் என்ன பொருளிருக்க முடியும்?
- வாழ்கிறபோது முக்தி அடையவில்லை என்றாலும் அவர் இறந்த பிறகு அவரைப் பெருமைப்படுத்தும் விதத்தில் முக்தி அடைந்தார் என்று சொல்வது உலகியல் மரபு.
- மூலத்தை உணர்ந்து. மும்மலங்களை அகற்றி அன்பின் முழமையாய், தவவாழ்வும் அறநெறியும் வாழ்வதே முக்தி. வாழ்க வளமுடன்.

# துணைநின்ற நூல்கள்.

1. பாரதியார் பாடல்கள், உமா பதிப்பகம், சென்னை.
2. ஞானக்களஞ்சியம், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு
3. இணையதள தகவல்கள்.
4. ஞானக்களஞ்சிய கவிகள், இரா. மாரியம்மாள் மோகன்தாஸ், வேதலோக அன்பு நிலையம், பொள்ளாச்சி
5. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000, மன்னார்குடி பானுகுமார். விஜயா பதிப்பகம், கோவை.
6. ஞாலம் போற்றும் ஞானிகள், மன்னார்குடி பானுகுமார், விஜய பதிப்பகம், கோவை
7. பாரதியார் பாடல்கள், பாரதியார் இணையதளம்
8. ஜென் கதைகள், இணையதளம்
9. தத்துவ சிகரங்கள், முனைவர் அழகர் ராமானுஜம்